<u>**In the Court of the District Munsif, Eraniel**</u>

**Original Suit No. 23/2025** **Date:02.02.2026.**

**(PW1)-** அருணை நாதன்

<u>**4** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. எனது அப்பா எனக்கு செட்டில் மெண்ட் ஆக கொடுத்த சொத்தானது எனது அப்பாவின் அப்பா சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 4 ம் பிரதிவாதியின் விலாசமாக குறிப்பிட்டுள்ள கதவு எண் 7/20 கொண்ட வீடு சர்வே எண் 159/29 ஆன இரண்டாம் வழக்கு பட்டிகை சொத்தில் அமைந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது 5 ம் பிரிதிவாதிக்கு கொடுத்த கதவு எண் 7/56-1 கொண்ட வீட்டில் இருந்து வருகிறேன் என்றாலும் 5 ம் பிரதிவாதி கதவு எண் 7/56 பி, 3 ம் பிரதிவாதியான எனது தாயார் 5 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கிய கதவு எண் 7/20 கொண்ட வீட்டில் வசித்து வருகிறார் என்றாலும் நான் குறிப்பிடுவது போல் கதவு எண் 7/26 கொண்ட 4 ம் பிரதிவாதியின் வீட்டில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றாலும் மேற்படி வீட்டில் எந்த அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல, ஆனால் நான் கதவு எண் கதவு எண் 7/26 கொண்ட வீட்டில் வசிக்கவில்லை.

2. பண்டாரானாடாரின் மற்ற 3 சகோதரர்க்கும் அவரது வாரிசுகளுக்கும் பட்டிகை சொத்தில் உரிமை இல்லை என்றாலும் அதனால் தான் நான் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. 2 ஆம் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து வருமானம் வருகிறது என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. 2 ஆம் பட்டிகை சொத்து கோவில் சொத்தில் வருகிறது என்பதை எதன் அடிப்படையில் கூறிகிறேன் என்றால் தாய் பத்திரத்தில் உள்ளது. நான் அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்க்கவில்லை. மேற்படி 2 ம் பட்டிகை சொத்தில் 4 ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றாலும் அதனால் தான் நான் பட்டிகை சொத்தை அளவீடு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முழு சொத்தும் இசக்கி அம்மன்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 ம் பட்டிகை பழைய சர்வே எண் 2676 -ல் உள்ள சொத்து முழு விஸ்தீரணமும் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் 27 செண்ட் சொத்தான பண்டாரானாடாரின் பாக சொத்தை தனநிச்சிய பத்திரமாக கோவிலுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பழைய சர்வே எண் 2676 -ல் சொத்தில் சர்வே எண் 159/29 மற்றும் 159/35 சொத்துக்களை தவிர வேறு சொத்துகளும் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இசக்கிஅம்மன் கோவில் சொத்து சர்வே எண் 159/25 ல் அமைந்துள்ளது என்றால் அது பற்றி தெரியாது. கோவில் எங்கு உள்ளது என்றால் அது எனக்கு தெரியும். கோவிலின் 4 பக்க சொத்தின் உரிமையாளர்கள் யார் என்றால் வடக்கும், கிழக்கும் சாலையும் மேற்கும் தெற்கும் கோவிலுக்கு சொந்த மான இடம் உள்ளது. கோவிலின் அமைந்துள்ள சொத்தின் இடதுபுறம் வீடும் வலது புறம் காலி இடமும் சர்வே எண் 159/35 ல் பண்டாரானாடாரின் 2 ம் மகனின் வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. கோவிலில் இருந்து சர்வே எண் 159/29 சொத்திற்கு எவ்வளவு தொலைவு உள்ளது என்றால்

50 அடி தூரம் இருக்கும். அவ்வாறு இல்லையென்றாலும் 45 மீட்டர் 150 அடி தூரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் அளக்கவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 10.02.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது